# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 53/மா/2023**
**நாள் : 03.04.2023**

திரு. சே. இராசேந்திரன்,
அழகாபுரம் புதூர், சேலம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் புதூர், இராமன்குட்டை, பிடாரியம்மன் கோவில் தெரு, எண்.58 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சே. இராசேந்திரன் என்பவரின் 22.02.2023 நாளிட்ட மனு 23.02.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 53/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் புதூர், இராமன்குட்டை, பிடாரியம்மன் கோவில் தெரு, எண்.58 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சே. இராசேந்திரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

"சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், அழகாபுரம் புதூர், இராமன்குட்டை பிடாரியம்மன் கோவில் தெரு, கதவு எண்.58இல் வசித்துவரும் 58 வயதுடைய சமூக சேவகருமான இராசேந்திரனாகிய எனக்கு சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், அழகாபுரம் புதூர் ரோகினி கார்டனில் குடியிருந்து வரும் லோட்டஸ் தன்னார்வ தொண்டு நிறுவனமும் அரசு அலுவலருமான செலின் அகஸ்டின் மேரி என்பவர் எமது சேவைப் பணியை திட்டமிட்டு முடக்கிவருவதுடன் அடிப்படை வாழ்வாதார உரிமையை முடக்கி மனித உரிமையை பறித்துவிடுகிறார்கள். இது சம்பந்தமாக பல்வேறு மனுக்கள் அனுப்பப்பட்டும் பொது ஊழியர்கள் எதிராளிகளிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு சட்டத்துக்கு முரணாக நடந்து கொண்டு பாதிக்கப்பட்டவரையே குற்றவாளியாக்கி சேவைப் பணியை தடுத்து வருகிறார்கள். உயிர்வாழும் உரிமையை பறிக்கும் விதமாக குடிநீர் வளத்தை பெறவிடாமல் தடுத்து வருகிறார்கள். இதற்கு முன்பு போர்வெல் கைப்பம்பு இருந்தபோது தண்ணீரை எடுத்து பயன்படுத்தி வந்தோம். மனுதாரர் 4,5வது வார்டின் அருகில் வசித்து வருகிறார். அபாண்டமாக பொய் பிரச்சாரம் செய்து குடிநீரை பொதுக் குழாயில் பிடிக்கவிடாமல் தடுத்து வருகிறார்கள். பொது ஊழியர்களின்

ஆதரவுடன் சமூக சேவைப் பணிக்கு தடை ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால் அசுத்தமான ஏர் பைப்பில் ஒழுகும் நீரை எடுத்து பயன்படுத்தும் துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

அடிப்படை வாழ்வாதார உரிமையான குடிநீரைக் கூட பெற முடியாமல் சுற்றுப்புறச் சூழலையும் சுகாதாரத்தையும் கெடுத்து ஒழுங்கீனத்தை உண்டாக்கிவரும் எதிரிகள் மீது குற்ற நடவடிக்கை எடுக்காமல் தவறிவரும் ஊழியர்கள் மீது துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மேற்படி குறை தீர்மனுக்கள் மீது எந்தவித நடவடிக்கையையும் எடுக்காமல் கிடப்பில் போட்டுவிட்ட பொது ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் சமூக ஆர்வலரின் சேவைப்பணியை அங்கீகரித்து வீட்டிற்கு முன்புறமுள்ள குடிநீர்க் குழாய் கேட்வால்வுக்கருகில் பொதுக் குடிநீர் குழாய் அமைத்துத் தந்தும் அன்பாலயம் கருணை இல்லச் சேவைப் பணிக்கு தனி குடிநீர் இணைப்பு வழங்க உத்தரவிட்டு உதவுமாறு கோரியுள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி ஆணையாளரிடம் 9.3.2023 அன்று கோரப்பட்டது சேலம் மாநகராட்சி ஆணையர் தனது 25.3.2023 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :**

சேலம் மாநகராட்சி அழகாபுரம் புதூர் இராமன்குட்டை பிடாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் திரு. எஸ். ராஜேந்திரன் என்பவர் அவரது பகுதியில் வசிக்கும் சிலரால் அவருக்கு ஏற்படும் இடையூறுகளில் இருந்து நிவாரணம் கோரியுள்ளார். அவற்றுள் சேலம் மாநகராட்சிக்கு தொடர்புடைய கோரிக்கையான அருகாமையில் உள்ள பொதுக் குடிநீர் குழாயிலிருந்து தன்னால் குடிநீர் பெற இயலாத நிலை உள்ளதாக குறிப்பிட்டுள்ள கோரிக்கையின் மீது சேலம் மாநகராட்சி அலுவலர்களால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. நேராய்வின்போது மனுதாரரின் குடியிருப்பு பகுதியில் முன்னதாக பழுதுபட்டு பயன்பாட்டில் இல்லாத காரணத்தால் அகற்றப்பட்டிருந்த பொதுக்குடிநீர் குழாய் புதுப்பித்து அமைக்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**இந்நிலையில் இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 28.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 09.3.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 28.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் எனது வீட்டிற்கு சேலம் மாநகராட்சியில் குடிநீர் இணைப்பு கோரியிருந்தேன். பட்டா இல்லாத காரணத்தால், எனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கொடுத்திட மாநகராட்சி அலுவலர்கள் மறுத்து வருகின்றனர். நான் குடியிருக்கும் பகுதியில் 3 இடங்களில் பட்டா இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியால் குடிநீர் வழங்காதது குறித்து மாவட்ட ஆட்சியரிடமும் மற்ற அதிகாரிகளிடமும் மனு அளித்திருந்தும், எனது மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாநகராட்சியால் எனது இருப்பிடத்திற்கு அருகில் போடப்பட்ட பொதுக்குழாயில் தண்ணீர் பிடிப்பதில் அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்படுகின்றது. எனவே சேலம் மாநகராட்சியால் எனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கிடவும், எனக்கு குடிநீர் இணைப்பு வழங்கத் தவறிய

மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்பட்ட எனது 22.2.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**சேலம் மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் 28.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு கேட்டு அளித்த மனு மீது சேலம் மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில், மனுதாரர் குடியிருக்கும் இடத்திற்கு பட்டா இல்லை. மேலும் மாநகராட்சியால் வரி விதிப்பும் செய்யப்படவில்லை. எனவே மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்க வழிவகையில்லை எனவும், மனுதாரர் குடியிருக்கும் இடத்தில் பழுதுபட்டு பயன்பாட்டில் இல்லாத பொதுக் குழாய் புதுப்பிக்கப்பட்டு தற்போது அக்குழாய் பயன்பாட்டில் உள்ளது எனவும், இதனை மனுதாரர் குடும்பத்தினரும் மற்ற குடியிருப்பினரும் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, இது தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளனர்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், சேலம் மாநகராட்சி உதவி செயற் பொறியாளர், வாக்குமூலம் மற்றும் ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் தான் வசிக்கும் வீட்டின் முன்புறம் தெருவில் உள்ள பொது குடிநீர் இணைப்பை தனக்கு வேண்டாதவர்கள் அரசு அலுவலர்கள் உதவியுடன் துண்டித்துவிட்டதாகவும், எனவே மீண்டும் ஏற்படுத்தவும் தன்னுடைய வீட்டிற்கு பொது குடிநீர் அமைத்து தந்து அன்பாலயம் இல்ல சேவை பணிக்கு உதவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தான் குடியிருக்கும் பகுதியில், பட்டா இல்லாத 3 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு சேலம் மாநகராட்சியால் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கு உரிய ஆவணங்கள் ஏதும் இம்முறைமன்றத்தில் மனுதாரரால் அளிக்க இயலவில்லை. முறையான ஆவணங்கள் இன்றி புகார் அளிப்பது கண்டிக்கத்தக்கது ஆகும்.

மனுதாரர் வசிக்கும் இடத்திற்கு பட்டா வழங்கப்படவில்லையெனவும், வரி விதிப்பும் செய்யப்படாத காரணத்தால் மனுதாரருடைய வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்க வழிவகை இல்லை எனவும் ஆனால் மனுதாரரின் வீட்டின் முன்னதாக பழுதுபட்டு இருந்த பொது குழாய் புதுபிக்கப்பட்டு அக்குழாய் பயன்பாட்டில் உள்ளது என்பதும் சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி உதவி ஆணையரின் வாக்குமூலத்தின் தெரியவருகிறது. மனுதாரர் புகார் அளித்தவுடன், பழுதுபட்டு இருந்த பொது குடிநீர் குழாயை புதுபிக்கப்பட்டிருந்தால் இவ்வாறான புகார் மனுக்களை தவிர்த்திருக்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிகாட்ட விரும்புகிறது. மேலும், மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு மனு அளித்த பின்னர்தான், பொதுக் குழாய் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. காலம் கடந்து செய்யப்பட்ட இச்செயல் கண்டிக்கத்தக்கது ஆகும். தற்போது கோடைகாலம் ஆரம்பித்துவிட்ட நிலையில், பொது

மக்களின் அன்றாட தேவையான குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும்வகையில் சேலம் மாநகராட்சியின் அலுவலர்கள், மாநகராட்சியில் இவ்வாறு பழுதடைந்த நிலையில் உள்ள பொது குடிநீர் குழாய்களை கண்டறிந்து அவற்றை புதுப்பித்து உரிய நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளுமாறு சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும், அடிப்படை வசதிகள் கோரி பொது மக்கள் மனு அளிக்கும் முன்பாக, சேலம் மாநகராட்சி களப் பணியாளர்களைக் கொண்டு அவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டு தீர்வு காண சேலம் மாநகராட்சி அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு, சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. சே. இராசேந்திரன்,
த/பெ.சேவாகவுண்டர்,
58, இராமன் குட்டை,
பிடாரியம்மன் கோவில் தெரு,
அழகாபுரம், புதூர், சேலம் - 16.
2) ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம் - 636 001.
3) துணை ஆணையர்,
அஸ்தம்பட்டி மண்டலம்,
சேலம் மாநகராட்சி, சேலம் - 636 007.
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

03/04/23
செயலாளர்.

3.4.2023

சென்னை-600 032